சார்பு நீதிமன்றம், உசிலம்பட்டி

முன்னிலை : திரு. R. பிரேம் ஆனந்த், எம்.எல்.,

சார்பு நீதிபதி, உசிலம்பட்டி

2021-ம் ஆண்டு மார்ச் மாதம் 12ம் நாள் வெள்ளிக்கிழமை

**அசல் வழக்கு எண் : 248 / 2019**

பெருமாயி .. வாதி

/ எதிர் /

1. பால்பாண்டி
2. ஜெயராமன்
3. முத்துப்பாண்டி
4. முத்தழகன்
5. ராமச்செல்வி
6. பண்டியம்மாள்
7. பஞ்சு
8. வன்னி
9. சொக்கம்மாள்
10. ராமாயி
11. லெட்சுமி
12. எலக்ஸ் .. பிரதிவாதிகள்

*****

இந்த வழக்கு இந்நீதிமன்றம் முன்பு 24.02.2021 அன்று இறுதியாக விசாரணைக்கு வந்த போது வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. A. மீனாட்சிசுந்தரம் அவர்களும், 1 முதல் 7, 9, 11, 12 பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. R. பிரகாசம் அவர்களும் முன்னிலையாகியுள்ளார்கள். மேற்படி பிரதிவாதிகள் வழக்கறிஞர்கள் மூலம் ஆஜராகி பின்பு எதிர் வழக்குரை தாக்கல் செய்யாமல் நீதிமன்றத்தில் ஆஜராகமால் தோன்றாத் தரப்பினர்களாகக் கருதப்பட்டுள்ளார்கள். 8, 10 பிரதிவாதிகள் அழைத்தும் ஆஜராகாததால் அவர்கள் தோன்றாத் தரப்பினர்களாகக் கருதப்பட்டு வழக்கு ஆவணங்கள் மற்றும் சாட்சியம், வாதங்கள் பரிசீலிக்கப்பட்டு இதுவரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்..

**<u>தீர்ப்புரை</u>**

தாவாச் சொத்துக்கள் வாதிக்கு பாத்தியம் என விளம்புகை பரிகாரம் வழங்கக் கோரியும், அதனைத் தொடர்ந்து தாவாச் சொத்துக்களில் வாதியின் அமைதியான அனுபவத்தை பிரதிவாதிகளோ அவர்களது வகையாட்களோ எவ்விதத்திலும் ஆக்கிரமிப்பு செய்து இடைஞ்சல்கள் செய்யாமல் இருக்க நிரந்தர தடையுறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும் செலவுத் தொகைக்கும் தாக்கல் செய்யப்பட்ட வழக்காகும்.

1**<u>. வாதி தரப்பு வழக்குரையின் சுருக்கம் பின்வருமாறு :</u>**

*1.1.* தாவா சொத்துக்களும், இதர சொத்துக்களும் ஆதியில் பெருமாள் என்பவருக்கு பூர்வீக பாத்தியப்பட்ட சொத்துக்களாகும். பெருமாள் என்பவருக்கு இரண்டு மனைவிகள். முதல் மனைவி மூலம் சின்னன் என்ற மகன் உள்ளார். சின்னன் என்பவரின் மூத்த மகனான பெருமாள் என்பவருக்கும் அவரது மனைவியான பொன்னம்மாள் ஆகிய இருவருக்கும் 1 முதல் 4 பிரதிவாதிகள் மகன்கள் ஆவார்கள். 8 முதல் 12 பிரதிவாதிகள் சின்னன் என்பவரின் மகள்கள் ஆவார்கள். பெருமாளின் இரண்டாவது மனைவியான காளியம்மாளுக்கு முனியாண்டி என்ற மகன் உள்ளார். மேற்படி முனியாண்டியின் மகன் வாதியின் கணவரான ராமன் ஆவார். தாவா 1 முதல் 3 அயிட்ட சொத்துக்களையும் இதர சொத்துக்களையும் வாதியின் கணவரின் தகப்பனாரான முனியாண்டி என்பவரும், சின்னன் என்பவரும் வாக்கிரால் பாகம் பிரித்து அனுபவம் செய்து வந்தனர். தாவா 1 முதல் 3 அயிட்ட சொத்தினை பாகம் பிரித்ததில் தாவா 1-வது அயிட்ட சொத்தில் செண்டு 9-ல் கீழ்புறம் செண்டு 4½ வாதியின் கணவருக்கு சரிபாகமாகவும், தாவா 2 வது அயிட்ட சொத்தில் செண்டு 40 ல் வடபுறம் செண்டு 20 தினை வாதியின் கணவருக்கு சரிபாகமாகவும், தாவா 3 வது அயிட்ட சொத்தில் செண்டு 29 ல் வடபுறம் செண்டு 14½ வாதியின் கணவருக்கு பாகமாகவும் கிடைத்து அனுபவம் செய்து வந்தனர். தாவா 1, 2 அயிட்ட சொத்துக்களுக்கு வாதியின் கணவரான ராமன் பெயரிலும், 1 முதல் 4 பிரதிவாதிகள் மற்றும் அவர்களது தாயார் பொன்னம்மாள் பெயரிலும் கூட்டாக பட்டா ஏற்பட்டிருந்தது. தாவா 1 முதல் 3 அயிட்ட சொத்துக்களை

வாதியின் கணவர் அனுபவம் செய்து வந்து கடந்த 09.04.2015ல் வாதிக்கு தான செட்டில்மெண்ட் பத்திரம் எழுதிக் கொடுத்துள்ளார். தாவா சொத்துக்கள் வாதிக்கு தான செட்டில்மெண்ட் பத்திரத்தின் மூலம் கிடைக்கப்பட்டு அனுபவம் செய்து வந்தார். தாவா 1 முதல் 3 அயிட்ட சொத்துக்களுக்கு வாதியின் பெயரிலும் 1 முதல் 4 பிரதிவாதிகள் பெயரிலும் அவர்களது தாயாரான பொன்னம்மாள் பெயரிலும் கூட்டுப் பட்டா ஏற்பட்டுள்ளது. வாதிக்கு அவரது கணவரிடமிருந்து தானசெட்டில்மெண்ட் பத்திரத்தின் மூலம் கிடைக்கப்பெற்ற தாவா சொத்துக்களில் அத்துமீறி நுழைந்து அமைதியான அனுபவத்தினை இடையூறு செய்த 1 முதல் 4 பிரதிவாதிகள் மற்றும் 4-வது பிரதிவாதியின் மனைவி சாந்தி மற்றும் 5-வது பிரதிவாதி மற்றும் வீரணன் மீதும் உசிலம்பட்டி தாலுகா காவல் நிலையத்தில் புகார் கொடுத்து வழக்கு பதிவு செய்து அந்த வழக்கு நிலுவையில் உள்ளது. எனவே பிரதிவாதிகளுக்கு எதிராக தாவாச் சொத்துக்களைப் பொறுத்து விளம்புகை பரிகாரம் கோரியும், நிரந்தர தடையுறுத்துக்கட்டளைப் பரிகாரம் கோரியும் வாதியால் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. 1 முதல் 7 மற்றும் 9, 11, 12 பிரதிவாதிகள் தங்கள் வழக்கறிஞர் மூலம் இவ்வழக்கில் முன்னிலையாகியுள்ளார்கள். ஆனால் மேற்படி பிரதிவாதிகள் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாததாலும் பிரதிவாதிகள் முன்னிலையாகததாலும் அவர்கள் தோன்றாத் தரப்பினர்களாக உத்தரவு செய்யப்பட்டுள்ளார்கள். 8, 10 பிரதிவாதிகள் அழைத்தும் ஆஜராகாததால் அவர்கள் தோன்றாத் தரப்பினர்களாக உத்தரவு செய்யப்பட்டுள்ளார்கள். வாதி தரப்பில் வாதி வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு வ.சா.ஆ.1 முதல் வ.சா.ஆ.5 வரை சான்றவாணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

3. வாதி கேட்கும் பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கதா? என்பதை பரிசீலிக்கும் போது வாதி தன்னுடைய வழக்கினை மெய்ப்பிப்பதற்காக கொடிவழி ஜாபிதா வா.சா.ஆ.1 ஆகவும், பட்டா எண். 1035 கணினி பட்டா வா.சா.ஆ.2 ஆகவும், 09.04.2015-ம் தேதியிட்ட

தான செட்டில்மெண்ட் பத்திரம் வா.சா.ஆ.3 ஆகவும், பட்டா எண். 1192 கணினி பட்டா வா.சா.ஆ.4 ஆகவும், 15.09.2016-ம் தேதியிட்ட உசிலம்பட்டி தாலுகா காவல் நிலைய குற்ற எண். 241 / 2016 முதல் தகவல் அறிக்கையின் நகல் வா.சா.ஆ.5 ஆகவும் தாக்கல் செய்துள்ளார். ஆனால் பிரதிவாதிகள் இந்த வழக்கில் தங்களது வழக்கறிஞர் மூலம் முன்னிலையான போதும் அவர்கள் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாமலும் நீதிமன்றத்தில் பின்பு முன்னிலையாகமாலும் இருந்துவிட்டார். எனவே அவர்கள் தோன்றாத் தரப்பினர்களாக உத்தரவு செய்யப்பட்டுள்ளார்கள். பிரதிவாதிகள் இந்த வழக்கின் முழு விபரங்கள் தெரிந்தும் நீதிமன்றத்தில் முன்னிலையாகி எதிர் வழக்காடவில்லை என்பதால் வாதியின் வழக்கு விபரங்களை பிரதிவாதிகள் ஒப்புக்கொண்டுள்ளதாக இந்நீதிமன்றம் கருதுகிறது. பிரதிவாதிகள் இவ்வழக்கில் முன்னிலையாகி ஆட்சேபணை ஏதும் செய்யாத நிலையில் 09.04.2015 ம் தேதியிட்ட தான செட்டில்மெண்ட் பத்திரம் வாதியின் பெயரில் பெயரில் உள்ளது. எனவே தாவா சொத்துக்களுக்கு வாதியே முழு உரிமையாளர் என்று விளம்புகை செய்தும், அதன் தொடர்ச்சியாக தாவா சொத்தில் வாதியின் அமைதியான அனுபவத்தை பிரதிவாதிகளோ அவரது ஆட்களோ, எவ்வித இடைஞ்சலும் செய்யக்கூடாது என்று நிரந்தர தடையுறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கி தீர்ப்பளிப்பது நீதிக்கு உகந்ததாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே பிரதிவாதிகளுக்கு எதிரான இந்த வழக்கு வாதி தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளதாக இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது. எனவே வாதி கோரியுள்ள பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கது என்று இந்த நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

முடிவாக, வாதியின் வழக்கு செலவுத் தொகையுடன் அனுமதிக்கப்பட்டு, தாவா சொத்துக்களுக்கு வாதியே முழு உரிமையாளர் என்று விளம்புகை செய்தும், அதன் தொடர்ச்சியாக தாவா சொத்தில் வாதியின் அமைதியான அனுபவத்தை பிரதிவாதிகளோ அவரது ஆட்களோ எவ்வகையிலும் இடையூறோ, தொந்தரவோ செய்யக்கூடாது என்று நிரந்தர தடையுறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கி தீர்ப்பளிக்கப்படுகிறது.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து - தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைநீக்கம் மேற்கொண்டு இன்று 2021-ம் ஆண்டு மார்ச் திங்கள் 12-ம் நாள் அவையறியப் பகரப்பட்டது.

ஒம். R. பிரேம் ஆனந்த் 12.03.2021
சார்பு நீதிபதி,
உசிலம்பட்டி.

**வாதி தரப்பு சாட்சி :**

வா.சா.1 பெருமாயி

**வாதி தரப்பு சான்றாவணங்கள் :**

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.1. | -- | கோடிவழி ஜாபிதா |
| வா.சா.ஆ.2. | -- | பட்டா எண். 1035 கணினி பட்டா |
| வா.சா.ஆ.3 | 09.04.2015 | தான செட்டில்மெண்ட் பத்திரம் |
| வா.சா.ஆ.4. | – | பட்டா எண். 1192 கணினி பட்டா |
| வா.சா.ஆ.5. | 15.09.2016 | உசிலம்பட்டி தாலுகா காவல் நிலைய குற்ற எண். 241 / 2016 முதல் தகவல் அறிக்கையின் நகல் |

ஒம். R. பிரேம் ஆனந்த் 12.03.2021
சார்பு நீதிபதி,
உசிலம்பட்டி.

/ உண்மை நகல் /

சார்பு நீதிபதி,
உசிலம்பட்டி.